# கொரோனாவைரஸ் என்றால் என்ன?



அது ஒரு வைரஸ். அது ஒரு புது வியாதியைத் தருகிறது. அந்த வியாதியை நாம் கோவித் - 19 என்று அழைக்கிறோம்.




பெரும் பாலும் அதன் விளைவுகள்: இருமல, காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம்.



அநேகமாக இந்த வியாதி கொடியது அல்ல மற்றும் நாம் சுலபமாகக் குணமடைகிறோம்.



ஆனால் சில சமயங்களில் அது கடும் விளைவுகளைத் தரும். முக்கியமாக 70 வயதிற்கு மேல் ஆனவர்கள் மற்றும் வேறு ஒரு நோயுடன் நாதுக்கான உடல் நிலை கொண்டவர்கள். உ.ம். நீரிழிவு, சுவாசக் கோளாறு, சிறுநீரகப் பாதிப்பு, புற்று நோய், எய்ட்ஸ், மற்றும் பல.



தற்சமயம் கோவித் 19 க்கு ஒரு சிகிச்சையோ தடுப்பூசியோ கிடையாது.

# கொரோனாவைரஸ் எப்படித் தொற்றுகிறது?



இந்த வைரஸ் பேசும் பொழுது வெளிவரும் துளிகள், உமிழ் நீர் மற்றும் ஏற்கனவே இந்தத் தொற்று உள்ளவர் தொட்ட பொருட்கள் மற்றும் அவரது கைகளில் இருக்கிறது.



ஏற்கனவே தொற்று உள்ளவருக்கு மிக அருகில் இருந்தால் அவர் பேசும் பொழுதோ இருமும் பொழுதோ அல்லது அவரிடமிருந்து வெளிப்பட்ட நீர்த் துளிகள் விழுந்துள்ள பொருட்களைத் தொட்டாலோ இந்த நோய் நம்மிடம் பரவலாம்.



கவனம்: நோய் பற்றிய அறிகுறிகள் இல்லாமலே ஒருவருக்கு இந்த வைரஸ் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் நோயை மற்றவருக்குப் பரப்பலாம். அதனால் தான் நாம் நல்ல நிலையில் இருப்பது போன்று உணர்ந்தாலும் மற்றவர்களிடமிருந்து இடைவெளிவிட்டு இருக்க வேண்டும்.

Santé publique France - 23 mars 2020 - Réf. W-1000-001-2003 Tamoul

கொரோனாவைரஸ் பற்றிய சந்தேகங்கள் இருக்கின்றனவா?

gouvernement.fr/info-coronavirus

**0 800 130 000**
(இலவச அழைப்பு)

அல்லது ஒரு மருத்துவ நிபுணரையோ சங்கத்தையோ தொடர்பு கொள்ளவும்